செ.வெ.எண்:49 நாள்:19.07.2018

**கரூர் மாவட்டம்**

**அமராவதி மற்றும் காவரிக்கரையோரங்களில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., வேண்டுகோள்**

**அதன் விபரம் வருமாறு:**

மண்மங்கலம் வட்டம் பெரியாண்டான்கோவில் அமரவதி ஆற்றின் குறுக்கே கட்டுப்பட்டுள்ள தடுப்பணை மற்றும் வாங்கல் காவரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் ஆகிய பகுதிகளில் உபரி நீர் வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று(19.7.2018) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அமராவதி அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதையொட்டி கரூர் மாவட்டத்தில் உள்ள பெரியாண்டான்கோவில் தடுப்பணையிலும் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீர் வாங்கல் பகுதிகளில் உபரி நீர் வந்துகொண்டிருக்கின்றது. எனவே, கரையோரங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் உடமைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்குச்செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெரியாண்டான்கோவில் அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தடுப்பணை பகுதியிலிருந்து சுமார் 25 கிலோமீட்டர் தொலைவில் திருமுக்கூடலூர் பகுதியில் உள்ள காவரி ஆற்றுப் பகுதியில் இந்த நீர் சென்று சேரும். கரூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி மற்றும் காவிரி நீர் செல்லும் பகுதிகளை பொதுப்பணித்துறையினர் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இன்று நண்பகல் 12 மணியளவிலான நிலவரப்படி அமராவதி அணைக்கு சுமார் 1800 கனஅடி அளவிலான தண்ணீர் வந்துகொண்டிருக்கின்றது. இதில் 500 கனஅடி அணையில் தேக்கி வைக்கப்பட்டு 1300 கனஅடி அளவிலான தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதில் கரூர் மாவட்டத்தில் 800 கன அடி ஆற்றிலும், 500 கனஅடி வாய்க்கால்களிலும் அனுப்பப்படுகின்றது.

இந்த நீரானது கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாய பயன்பாட்டிற்கு பெரிதும் உதவியாக இருக்கும். அதுமட்டுமல்லாது ஆடி18 விழாவை முன்னிட்டு பொதுமக்களுக்கு இந்த நீர் வருகை பயனுள்ள வகையில் அமையும். மேலும், வீடுகளில் பயன்படுத்தப்படும் கழிவுநீரோ, சாயப்பட்டறைகளில் பயன்படுத்தப்படும் கழிவுநீரோ ஆற்றிலோ, வாய்ககால்களிலோ கலக்காத வகையில் உரிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. கடந்த மாதத்தில் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் சாயப்பட்டறைகளில் திடீராய்வு மேற்கொள்ளப்பட்டு, விதிமீறி செயல்பட்ட 8 சாயப்பட்டறைகளுக்கு மின்இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும், டீசல் என்ஜின் மூலம் தண்ணீர உறிஞ்சியது கண்டறியப்பட்டு அந்த என்ஜின்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், கழிவுநீர் ஆற்றில் கலக்காத வகையில தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

கட்டுப்படுத்தப்பட்ட முறையில் நீர் வெளியேற்றப்படுவதால் பொதுமக்கள் அச்சப்படத்தேவையில்லை. எனினும், பாதுகாப்பு கருதி கரையோர மக்கள் உடமைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுகுறித்து கரையோர மக்களுக்கு தண்டோரா மூலமும் பிற விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.சூர்யபிரகாஷ், வருவாய் கோட்டாட்சியர் திரு.சு.சரவணமூர்த்தி, பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளர்கள் திரு.ராஜகோபால், திரு.ஸ்ரீதர், மண்மங்கலம் வட்டாட்சியர் திருமதி.கற்பகம் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.